

பாமாலை 325 A மயங்கும் தாசனை

1 மயங்கும் தாசனை
நாதா நீர் நடத்தும்
என் பாதை காட்டியாய்
சகாயம் புரியும்

2 நீர் காட்டும் பாதைதான்
எப்போதும் நல்லதே
சுற்று நேர் ஆயினும்
விண் வீடு சேர்க்குமே

3 என் சித்தம் ஆபத்தாம்
உம் சித்தம் நாடுவேன்
நான் செல்லும் பாதையை
நீர் காட்டக் கெஞ்சுவேன்

4 நான் தேடும் ராஜியம்
உம் சொந்தமானதே
அங்கென்னைச் சேர்த்திடும்
பாதையும் உம்மதே

5 வியாதி துன்பமோ
இஷ்டர் பகைஞரோ
வறுமை செல்வமோ
சிறிதோ பெரிதோ

6 என் இஷ்டம் எதிலும்
வேண்டாம் என் நாதரே
என் வழி காட்டியாம்
நீர் சர்வ ஞானரே